
# அருளாட்சி அழைப்பு அறிவிப்பு
# இந்து மறுமலர்ச்சி இயக்கம் (இ.ம.இ.)

## INDU MARUMALARCHI IYAKKAM (I.M.I)


(Founded : 1772 A.D.)



இ. ம. இ. கொடி



தஞ்சைப் பெரியகோயிலைக் கட்டிய
பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதி
குருமகா சன்னிதானம்
சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூருர்.



**பாரம்பரியத்தலைவர்**
'ஞாலகுரு', 'ஞானகுரு', 'அரசயோகி'
அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம்
பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி
குருமகா சன்னிதானம் சித்தர் கருவூருர்.



ஆதி சங்கராச்சாரியார்



சிவன்



விநாயகர்

# அருட்பணி விரிவாக்கத் திட்டம்

இருளடைந்த வழிபடு நிலையங்களில் அருளொளி வீசிட ;

அருள் வேண்டுபவர் அகங்களில் எல்லாம் அருள் விளைந்திட ;

குண்டலினி சத்தி மானுடர் உடல்களில் ஊற்றெடுத்திட ; ...

சமய அறிவியல்களையும், கலைகளையும் கற்றுத் தருகிறோம் ! ! !

பெற்றுப் பயனடைவீர் !

**பதினெண் சித்தர் பீடாதிபதிகள்,** உலகியலின் தேவைக்கேற்பத் தோன்றி அருள் மழை பொழிந்து எல்லாப் பயிரினங்களும், உயிரினங்களும், பிறவும் உய்யுமாறு செய்துவருவதே இந்துமத மரபும் உண்மைத் தத்துவமுமாகும்.

கடலுள் மறைந்த முதல் நிலமான **குமரிக்கண்டம்** நீருக்குள்ளிருந்து வெளிப் பட்டுக் கொண்டிருந்த காலத்தில் — ''கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தில்'' — விண் வெளி அண்டங்களிலிருந்து பதினெண் சித்தர்களும், பதினெட்டாம்படிக் கருப்பர்களும் வந்தனர். அவர்கள், நாற்பத்தெட்டு வகையான வழிபாட்டு நிலையங்களையும், சமய இலக்கியங்களையும் முறைப்படி தோற்றுவித்து உருவாக்கியதே **'இந்துமதம்'.** இவர்கள் **'இந்து'** என்ற சொல்லை விந்து, உயிரணு, உயிரின்கரு, உயிரின் ஆரம்பமும் முடிவும், ஒளி ஒலி, வலிமை, வளம், அழகு, இளமை, இனிமை, அன்பு, அமைதி, நிறைவு, நிம்மதி, ஒற்றுமை, உறவு, உரிமை, பற்று, பாசம், நேர்மை, வாய்மை, தூய்மை, மெய்ம்மை, துய்ப்பு, பத்தி, சத்தி, சித்தி, முத்தி, நிலைப்பேறு, பிறப்பிறப்பற்ற பெருநிலை, தவம், ஞானம், அருள் என்று நாற்பத்தெட்டு வகையான பொருளுடைய ஒரு சொல்லாக உருவாக்கினார்கள். எனவே தான், இந்துமதம் உலக மானுட இனத்தைப் பயன்படுத்திடும் வழியாய், வழிகாட்டி-யாய், வழித்துணையாய், வழிப்பயனாய், என்றென்றும் இருந்து வருகிறது. அமிழ்தினுமினிய அரிய பெரிய பயன் நல்கு தமிழ் மொழியால் பிண்டத்தையும், அண்டத்தையும் இணைத்துப் பேரின்ப நிலை நல்கும் இந்துமதம் இம்மண்ணுலகின் முதல்மதம். இம்மதமே, தேவைக்கேற்பக் காலங்கள் தோறும் உலகம் முழுவதும் அருளாளர்களைத் தோற்றுவித்து எண்ணற்ற மதங்களை ஈன்றெடுத்து வருகின்றது.

அருளொளியால் பொருளுலக இருளகற்றும் பணி துவக்கப்பட்டு விட்டது. அருளாட்சி-யால் தான் பொருளுலக வீழ்ச்சிகளையும், தாழ்ச்சிகளையும் அகற்ற முடியும். ஞாலகுரு, ஞான-குரு, அரசயோகி, இராசிவட்ட நிறைவுடையார், ஆத்தாள் அமளிகை, கொற்றவை இருக்கை, பராசத்தி திருவடி, அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம், பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதி, குரு மகா சன்னிதானம் **சித்தர் கருவூரர்** தமது ஆயிரமாயிரம் அடியான்-களையும், அடியாள்களையும், அடியார்களையும் அருட்பணியாற்ற ஆணையிட்டுள்ளார் ... அனைவரும் வாருங்கள் ! அருளை அநுபவப் பொருளாகப் பெற்றுச் செல்லுங்கள் ! குண்டலினி சத்தியை எழுப்பிக் கொள்ளுங்கள் ! நெற்றிக்கண், பிடரிக்கண் பார்வையைப் பெறுங்கள் ! உச்சித் தாமரையை மலர வைத்துக் கொள்ளுங்கள் ! குருவருளால் சாகாக்கலை, வேகாத்தலை, போகாப்புனல் பற்றி உணருங்கள் ! மானுடர்க்குரிய ஆவி, ஆன்மா, உயிர் என்பனவற்றைப் புரிந்து தெளிந்து பேரின்ப வாழ்வு வாழுங்கள்.

*இந்தியப் பண்பாடே இந்து மதம்*


*சித்தர் நெறியே இந்தியப் பண்பாடு*

*தமிழர் சாதனையே இந்து மதம்*

**வாரீர் ! வாரீர் ! ! வாரீர் ! ! !**


# தமிழினச் செழுச்சிக்காக விடுக்கப்படும்
# எழுச்சிமிகு விழுச்சி நிறை வேண்டுகோள்
# இந்துமத மறுமலர்ச்சிக்காக விடுக்கப்படும்
# பயிற்சிமிகு உயர்ச்சிதரு அறிவிப்பு

## சித்தர்களின் அருளார்ந்த அறிவுரை—36




ஆன்மா:-

கட்டைவிரலில் முன் பாதி நீளஅகல அளவு ஒளியாக நீலநிறச் சுடராக இருக்கும்.



மிகப்பெரிய ஞானிகளின் ஆன்மா மட்டும் முழுக்கட்டை விரல் அளவுக்குப் பொன்னிற மஞ்சள் வண்ணமாக விளக்கின் சுடர் போல் இருக்கும்.



உயிர் :-

அவரவர் கைப்பிடி அளவு நல்ல சிவப்பு வண்ண நெருப்புக்கனல் போல் சுடராக இருக்கும். மாங்காய் வடிவாக இருக்கும்.

ஆவி :- மனித வடிவம்போல் முழுமையாக வெண்ணிறமாக இருக்கும். மனித உடலின் மேல் மெல்லிய வெண்மைத் துணியைப் போர்த்தியது போல் இருக்கும்.

சித்தர்கள் தான் அதாவது இந்துமதம் தான் இம்மூன்றையும் பற்றி இவ்வளவு தெளிவாகக் கூறுகிறது. முற்பிறப்புகள், மறுபிறப்புகள் இவற்றாலேயே விளக்கப்படுகின்றன. அதாவது மனித வாழ்வு பற்றிய முழுமையான விளக்கம் தருவது இந்துமதம் ஒன்றுதான்.

*— "கடவுள்களே மனிதர்களாக வருகிறார்கள்,"*
*மனிதர்களே கடவுள்களாக ஆகிறார்கள்"*

*"கடவுள் மனிதர்களின் முதலாளியோ, முடியரசனோ அல்ல"*
*"கடவுள் மனிதனின் தொண்டனாகத்தான் அருள் புரிவான்" —*

**ஆதாரம் :-** நிடதம், துணைநிடதம், இணை நிடதம், கருவாக்கு, கருவாசகம், சூத்திறம், சூத்திரம், சூத்தரம் ... என்ற நூல்கள்.

# (சூக்தம்) சூத்தரம், திருவாக்கு, குருவாக்கு, கருவாக்கு, அருள்வாக்கு, மருள்வாக்கு

## (ஆறு நூல்களிலிருந்து எடுக்கப்பட்டவை)

1. இந்து மதம் ஒரு ஞானம்
2. இந்து மதம் ஓர் உலகாயுத ஞானம்
3. இந்து மதம் ஒரு மானுடவியல் ஞானம்
4. இந்து மதம் ஓர் அநுபவவியல் ஞானம்
5. இந்து மதம் ஒரு தத்துவவியல் ஞானம்
6. இந்து மதம் ஓர் ஓதியல் [நாதாந்த] ஞானம்
7. இந்து மதம் ஒரு செயலியல் [சிந்தாந்த] ஞானம்
8. இந்து மதம் ஒரு போதியல் [போதாந்த] ஞானம்
9. இந்து மதம் ஒரு நிடதφ [நிட்டை=தவம்] ஞானம்
   [φ துணைநிடத ஞானம், இணைநிடத ஞானம்]
10. இந்து மதம் ஒரு *சூத்தர ஞானம்

    * சூத்திர ஞானம், சூத்திற ஞானம்
    இதைச் சூத்திரர்க்கு உரியது என்று
    தவறாகக் கருதக் கூடாது.

11. இந்து மதம் ஓர் △எந்தர ஞானம் [△ஏந்தர ஞானம், எந்திர ஞானம், எந்திற ஞானம்]
12. இந்து மதம் ஒரு αமந்தர ஞானம்
    [αமந்திர ஞானம், மந்திற ஞானம், மாந்தர ஞானம், மாந்தரீக ஞானம்]
13. இந்து மதம் ஒரு βதந்தர ஞானம்
    [β தந்திர ஞானம், தந்திற ஞானம், தாந்தரஞானம், தாந்தரீக ஞானம்]
14. இந்து மதம் ஒரு ɪசாத்தர ஞானம்
    [ɪ சாத்திர ஞானம், சாத்திற ஞானம்]
15. இந்து மதம் ஒரு dதோத்தர ஞானம்
    [d தோத்திர ஞானம், தோத்திற ஞானம்]
16. இந்து மதம் ஒரு eவேள்விஞானம்
    [e ஓம ஞானம், ஓக ஞானம், யாக ஞானம், யக்ஞ ஞானம்]
17. இந்து மதம் ஒரு பத்திஞானம்
18. இந்து மதம் ஒரு சித்திஞானம்
19. இந்து மதம் ஒரு சத்திஞானம்
20. இந்து மதம் ஒரு முத்திஞானம்
21. இந்து மதம் ஒரு நான்மறை ஞானம்
22. இந்து மதம் ஒரு நான்முறை ஞானம்
23. இந்து மதம் ஒரு நானெறி ஞானம்

24. இந்து மதம் ஒரு நான்வேத ஞானம்

25. இந்து மதம் ஒரு யோக ஞானம் (யோகாந்த ஞானம்)

26. இந்து மதம் ஒரு போக ஞானம் (போகாந்த ஞானம்)

27. இந்து மதம் ஒரு மோக ஞானம் (மோகாந்த ஞானம்)

28. இந்து மதம் ஓர் பிண்ட ஞானம்

29. இந்து மதம் ஓர் அண்ட ஞானம்

30. இந்து மதம் ஓர் அண்டபேரண்ட ஞானம்

31. இந்து மதம் ஓர் அன்பு ஞானம்

32. இந்து மதம் ஓர் ஆன்ம ஞானம்

33. இந்து மதம் ஓர் ஆவி ஞானம்

34. இந்து மதம் ஓர் உயிர் ஞானம்

35. இந்து மதம் ஓர் அரசியல் ஞானம்

36. இந்து மதம் ஒரு சமுதாய ஞானம்

மேலே குறிப்பிட்ட ஆறு நூல்களிலும், இவற்றின் துணையான 'சூத்திரம்', 'திருவாசகம்', 'குருவாசகம்', 'கருவாசகம்', 'அருள்வாசகம்', மருள்வாசகம்', எனும் ஆறு நூல்களிலும் ஒரே சொற்றொடரில் 'இந்துமதம்', 'மனிதவாழ்வு', 'கடவுள்', 'தமிழ்மொழி', ... பற்றிய கருத்துக்கள் ஏராளமாக உள்ளன. தமிழர்களுக்கு உண்மையான மொழியார்வம், மொழிப்பற்று, மொழியக்கறை, மொழிக்காப்பு, மொழிப்பேணல், மொழிவளர்ப்பு, மொழிச் செழிப்பு ... முதலிய உணர்வுகள் இல்லாமல் போனதால், மறைக்கப்பட்ட, மறக்கப்பட்ட, சிதைக்கப்பட்ட, சீரழிக்கப்பட்ட ... நூல்கள் ஏராளம்! ஏராளம்! — என்ற பேருண்மையைச் சுட்டிக் காட்டத்தான் இந்தத் தொகுப்பு வெளியிடப்படுகின்றது. பதினெண் சித்தர் பீடாதிபதிகளின் பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதியாகத் தோன்றிய, 'தாத்தா தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம், சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் ... அவர்கள் தமிழ் மொழியைக் காக்க இமாலய முயற்சிகள் பலவும் செய்து தோற்றுக் கி.பி. 1040-இல் தஞ்சைப் பெரிய கோயில் நிலவறைக்குள் செல்லும் போது அருளிய குருபாரம்பரிய வாசகங்கள் தான் இன்று எம்மைத் துணிந்து தொடர்ந்து இது போன்ற பணிகளை ஆற்றச் செய்கின்றன. அவ்வாசக வரிகளில் சில : –

''......என்றாவது ஒருநாள், எவராவது தமிழரைக் காப்பாற்ற நினைத்தால்; அவர்களை ஒற்றுமைப்படுத்தியே செயலில் இறங்க வேண்டும். அதற்குத் தமிழ்மொழியே வழியாக, வழிகாட்டியாக, வழித்துணையாக, வழிப்பயனாக, வழியின் எல்லையாக இருக்கும். அமிழ்தினும் இனிய தமிழ்மொழியைப் பெற்றும் தமிழர்கள் அகத்தாலும் உயர்வடைய முடியவில்லை. புறத்தாலும் உய்வடைய முடியவில்லை. இவர்கள் மதஞானம் பிறந்த தமிழ்

மொழியை மறந்தும், துறந்தும், புறக்கணித்தும் மாற்றுமொழிகளில் மதஞானத்தைத் தேடித் தோற்று வேற்றார்க்கு அடிமையாகி வேட்டை கிடைக்காத வேடன்போல் திரும்பிப் புலம்பி, அலமந்து, நைந்து, சிதைந்து ... மாளுகிறார்கள். எனவே, இவர்களை ஆளுபவர்கள், அன்னியர்களாகவே இருக்கும் அவலம் அடிக்கடி ஏற்படுகிறது. எப்படியும் இவர்களைக் காப்பதற்கே நூல்களைத் தொகுத்தும், தொகுப்பித்தும், எழுதியும், எழுதுவித்தும், செயல்படும் எமது முயற்சிகளைக் கோடிட்டுக் காட்டுவதே தமிழரைக் காக்கத் தயாரிக்கும் படையின் பாடி வீடு ...

குருபாரம்பரிய வாசகம் — அருளியவர் கருவூரார்

ஏட்டில் வரைந்தவர் — கருவூர்த் தேவர்

---

## இந்து மறுமலர்ச்சி இயக்கம் தோற்றம்.....கி.பி.1772

## அருளாட்சி அறிவிப்பு எண்.....19

---

# திருவாணை குருவாணை பெற்ற அறிக்கை

*இந்து மறுமலர்ச்சி இயக்கப் பாரம்பரியத் தலைவர்*
*பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி*
*ஞாலகுரு, ஞானகுரு, அரசயோகி,*
*இராசிவட்ட நிறைவுடையார்,*
*அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம்*
*குருமகா சன்னிதானம் 'சித்தர் கருவூரார்'*
(Dr) ப. கிருட்டிணமூர்த்தி, M.A., [Ph.D]
15, சண்முகம் தெரு, அம்பத்தூர், சென்னை-53.

**'நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்!'**

என இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் அருட்பணியால் யாவரும் நலமடைய இவ்வறிக்கையினை அன்பளிப்பாக அச்சிட்டு வழங்குகிறோம்.

அன்பன்
**அருள்மிகு தாயுமானவர் சன்னிதானம்**
மதுரை அழகர்கோவில் வாழ் முக்கூடற் பெருமால் ஆதீனம்,
வைகைக்கரை மதுரைமாநகர் தேவி மீனாட்சி மகிழ்
இராசராசேசுவரி பீடம்
முச்சத்தி ஆதீனக் கோட்டை,
வயலூரார் முருகன் அமளிகை,
சென்னகேசவப் பெருமால் திருவடி,
கூடல் அழகப் பெருமால் இருக்கை,
*சித்தரடியான்* சு. இராசு நாயுடு,
130 A, மேலமாசி வீதி, மதுரை-625 001.

# அருள் வழங்கு நிலையங்கள்

**பதினெண்சித்தர் சிவசத்தி பீடம்**

**அருட்பணி விரிவாக்கத் திட்டத் தலைமைச் செயலகம்**

அருள்மிகு வீரமாகாளி சன்னிதானம்,
திருமந்திர ஓலைநாயகம் சித்தரடியான் நெ. சேவுகன்
C/o. காதி வசுத்திராலயம், G.R.N.S கொட்டாம்பட்டி (அஞ்சல்)
மேலூர் வட்டம், மதுரை (Dist.) 625 103.

**அருவுருவ மூகாம்பிகை ஆலயம்.**

தேவி சௌடாம்பிகை அம்மன் சன்னிதானம்,
அருட்பணி விரிவாக்கச் சேரமண்டல நாயகம்,
சித்தரடியான், இரா. செ. வேங்கடரமணன், B E.
1/5, பழையதெரு, வேம்படிதாளம், சேலம் மாவட்டம்—637 504.

**சமயக் குரவர் நால்வர் பீடம்**

ஈசுவரர் பிச்சாண்டவர் சன்னிதானம்
சித்தரடியான் கொ.ம.கணேசன்
5/44, தெற்குத்தெரு, குலக்குடி (அஞ்சல்)
முசிறிவட்டம், திருச்சி மாவட்டம்—621 208.

**முக்கோண சத்தி பீடம்**

அருள்மிகு ஆத்தாள் பதினாறு திருக்கரம் கொண்டருளு தேவி
அகோர வீர பத்திரகாளி சன்னிதானம்
சித்தரடியான் இரா. சுப்புராயலு.
130-A. மேலமாசி வீதி, மதுரை—625 001.

**அருள்மிகு தேவிகருமாரியம்மன் சன்னிதானம்**

சித்தரடியான் ந.சண்முகம்.
24, புத்தகரம் கிராமம், லட்சுமி புரம் போஸ்ட் சென்னை—99

**அருள்மிகு சேலம் கோட்டை மாரியம்மன் சன்னிதானம்**


சித்தரடியான் மு. இராசேந்திரன்
புதூர், மார்க்கபந்து தெரு, நாகம்மாள் தோட்டம், சேலம்—1.

**ஆதி சத்தி கோட்டம்**

சென்னை நகர அருளாட்சி அமைப்புப் பொறுப்பாளர்,
அருள்மிகு இராமகிருட்டிண பரம அம்சர் சன்னிதானம்,
சித்தரடியான் சு. சாயிகோபால்
12, சிவானந்தம்தெரு, வினாயகபுரம், அம்பத்தூர், சென்னை—600053.

**அருள்மிகு தேவி வீரபாண்டி கௌரியம்மன் சன்னிதானம்**

**சித்தரடியான்** ச. பெரியசாமி
34,D. அப்பாராவ்தெரு, பெரிய காஞ்சீபுரம்.



# சிறப்புக் குறிப்பு

இன்றைய குருமகா சன்னிதானம் ஞாலகுரு, ஞானகுரு, அரசயோகி, பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதி அவர்கள் தமது அருட்செயலகமாக, இந்து மறுமலர்ச்சி இயக்க அருட்பணி விரிவாக்கத் திட்டத் தலைமைச் செயலகமாக சித்தர்நெறிக் குருகுலம், அருள்மிகு **வீரமாகாளி சன்னிதானம்**, அருள்மிகு அருவுநவ வெட்டவெளிக் கருவறைகள் கொண்ட **சனீசுவரர் தேவாலயம்**, நவக்கிரக பரிகார யாக சாலைக் கோயில் ... முதலிய அருளூற்றுக்களை மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், கொட்டாம்பட்டி அருகில் திண்டுக்கல் சாலையில் அமைக்கப்பட்டுள்ள **சித்தர் மாநகரில்** நிறுவியுள்ளார்கள். இங்கு ஒவ்வொரு முழு நிலவு இரவில் பருவபூசையும்; அமாவாசைப் பகலில் வேள்வியும் நடைபெறுகிறது. ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமை தோறும், மக்களின் வாழ்வியல் கோளாறுகளான கோள்கள், இராசிகள், மீன்கள் முதலியவைகளின் பாதிப்புகள்; சாபம், கண்ணேறு .... முதலிய தொல்லைகள்; செவ்வாய் தோசம், நாகதோசம், சென்மச் சனி...முதலிய பாதிப்புகள் நலிவுறுத்தும் நோய்கள், மனிதர்களைப் பிடித்தாட்டும் பேய், பிசாசு, ஆவிகள், ஊழ்வினை, விதி, மதி, மானுட முயற்சி, ... முதலிய அனைத்தையும் செம்மைப்படுத்தி அகவாழ்வையும், புறவாழ்வையும் நலப்படுத்தும் பணி கடந்த பத்து ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இங்கே ஆயகலைகள் அறுபத்து நான்கு, அருட்கலைகள் நாற்பத்தெட்டு, தெய்வீகக் கலைகள் ஒன்பது, பேய்க்கலைகள் ஒன்பது, நோய்க்கலைகள் ஒன்பது, தேய்கலைகள் ஒன்பது ... முதலிய கலை நிலைகள் கற்றுத் தரப்படுகிறது. குண்டலினி உணரல், தன்னையறிதல், பழம் பிறப்பு உணரல், வாழ்க்கை நிலையறிதல், மந்திர எந்திர தாந்ரீகத் தகடு பெறல் முதலியவற்றிற்கும் அருள் வாய்ப்புண்டு. இவற்றால், தனிமனித வாழ்வும், குடும்ப வாழ்வும், சமுதாய வாழ்வும், அரசியல் வாழ்வும் .. ஒழுங்குபட்டு, முழுமைபட்டு நிறைவடைந்திடும். எனவே, விருப்பாற்றலும், உழைப்பாற்றலும் உடைய பக்தர்கள் அனைவரும்

*வருக ! வருக !! வருக !!!*

ஒவ்வொரு சனிக்கிழமை தோறும் மாலை 4 to 6 மணியளவில் **மதுரை நகர், செல்லூர் அருள்தாசுபுரத்தில் அமைந்துள்ள அருள்மிகு ஐயனூர் திருக்கோயில்** முன்பாக பஞ்சாக்கினியாகம் வளர்க்கப்பட்டு மேலே கண்ட அனைத்து குறைகளுக்கும் பரிகாரங்கள் செய்யப்படுகிறது. அனைவரும் நலம்பெற வாரீர் ! வாரீர் !! வாரீர் !!!

**அன்பே சிவம்**

*ஓம் திருச்சிற்றம்பலம்*

**தென்னாடுடைய சிவனே போற்றி !**

**எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி !!**